முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் சங்கமுனிச்சித்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

23.03.2019, சனிக்கிழமை

1. **யோகத்தின் தலைவனே அரங்கா**
   **யோகிகளின் துணை கொண்ட அரசா**
   **வாகுடனே மக்களின் தேவைகள்**
   **வளர்ச்சிக்கு ஆறுதல்பட வந்து**
2. வந்துமே காத்தருளும் தேசிகா
   வள்ளலே உன் பெருமை கூறி
   சிந்தைபட நித்ய பிரசன்ன ஆசி
   செப்பிடுவேன் **விளம்பி சேல் திங்கள்**
3. **திங்களிலே நவதிகதி காரி வாரம்**
   **(விளம்பி வருடம் பங்குனி மாதம் 9ம் நாள் 23.03.2019, சனிக்கிழமை)**
   **தேசிகனுக்கு சங்கமுனிச்சித்தர் யானும்**
   ஓங்கார குடிலின் வளர்ச்சி குறித்தும்
   ஓங்கார உலகம் அமைதல் குறித்தும் உரைப்பேன்
4. உரைக்கவே வரும் விகாரி ஆண்டு
   உயர்வான வருகை முதலாக
   அறம் பெருகும் பிரணவக் குடிலில்
   அரசியலின் தொடர்பும் கூடும்
5. கூடுமே குடிலின் வளர்ச்சி
   குறையிலா உயர் மாந்தர்கள்
   நாடியே புதிய கிளைகள் விரிவும்
   ஞானவான் புதிய தூரதேசங்கள் மேவி
6. மேவியும் அரங்கன் புகழ் பரவும்
   மேலான வகை குடில் வளர்ச்சி பெறும்
   புவி எங்கும் அரங்கன் தருமம்
   பெருமளவில் வளர்ந்து வர
7. வருகவே ஓங்காரன் வழிபாடும்
   வளர பூசைகள் பெருகிட
   முருகப்பெருமான் ஆளுமை கொண்ட
   முழுமையான ஓங்கார நல்லுலகும்
8. நல்லுலகமாக மாற்றம் பெறும்
   ஞானத் தலைவன் முருகன்
   வல்லமைபட ஆசி தந்துமே
   வளர வேண்டி காத்திட நேரும்
9. நேருமைமிக்க அரங்கமகான்
   நல் சீடர்களை கொண்டுமே
   தரும உலகமாகி வருகவே
   தமிழகம் தொட்டே இந்த அற்புதம்

10. அற்புதம் சிறப்பாய் நடந்து
ஆறுமுகன் ஞான ஆட்சியாக
ஏற்பு கொண்ட வேலவன் ஆளும்
இணையிலா ஆட்சியாக மாறும்

11. மாறுதலை தரும் அரங்கா வாழ்க
மக்களை தேற்றும் அரசா வாழ்க
தேறுதலும் மாறுதலும் எல்லாம்
தேசிகனுன் அருளால் நடக்கும் நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் சங்கமுனிச்சித்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

எல்லையில்லாது யோகங்களை செய்து வெற்றி கண்டிட்ட யோகத்தின் தலைவனே யோகராசனே அரங்கமகாதேசிகனே, யோகிகளை துணையாகக் கொண்டிட்ட யோகஞானியே உலக மக்களின் தேவைகளை தீர்க்கவும், மக்களை காக்கவும், முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட ஞானதேசிகனே எல்லையில்லாது தர்மங்களை செய்கின்ற வள்ளலே வள்ளல் ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் பங்குனி மாதம் 9ம் நாள் 23.03.2019, சனிக்கிழமையான** இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே சங்கமுனிச்சித்தர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சங்கமுனிச்சித்தர்.

உலகினில் ஏழாம் படை வீடாய் அமைந்துள்ள துறையூர் ஓங்காரக்குடிலின் வளர்ச்சி குறித்தும் உலகினில் முருகப்பெருமான் ஆட்சியாக ஞானஉலகம் அமைவது குறித்தும் இந்நூலினிலே சங்கமுனி யானும் கூறுகிறேனப்பா.

வருகின்ற தமிழ் வருடமாகிய விகாரி ஆண்டு துவக்கம் முதலாக அறம் பெருகும் துறையூர் ஓங்காரக்குடிலினிலே துறையூர் ஓங்காரக்குடிலினை நோக்கி அரசியல் தலைவர்கள் வருகைபுரிய இருப்பதாலே அரசியல் தொடர்பும் பெருகிடுமப்பா. மேன்மையுற்ற உயர் மாந்தர்கள் மூலமாக குடிலின் வளர்ச்சி பெருகிடும், புதிய கிளைகள் விரிவடையும், ஞானம் பெற்ற ஞானவான்கள் எல்லாம் உலகினில் உள்ள பல நாடுகளுக்கும் சென்று அரங்கனின் புகழை கூறுவார். உலகினில் பல நாடுகளிலும் அரங்கன் புகழ் பரவபரவ, குடிலின் வளர்ச்சி பெருகி உலகமெங்கும் அரங்கனின் தருமமும், தருமக்கொள்கையும் பரவி பெருகிடும்.

உலகினில் அரங்கன் புகழும், பலமும், தர்மமும் பரவபரவ, உலகமெலாம் முருகப்பெருமானின் வழிபாடுகளும் பெருகிடத் துவங்கும். முருகப்பெருமானின் வழிபாடுகள் பெருகபெருக, அந்த தேசங்கள் எல்லாம் முருகப்பெருமானின் ஆசியினால் முருகப்பெருமானின் ஆட்சியினை உடைய முருகப்பெருமானை வழிபடுகின்ற அரசியல் தலைவர்களை கொண்டதாக மாறி உலகம் முழுமையான ஓங்கார நல்லுலகமாக ஆகிடும்.

இவ்வுலகம் நல்லுலகமாக மாற்றம் பெறுவதினாலே ஞானத்தலைவன் முருகப்பெருமானும் வெளிப்பட்டு வல்லமையுடன் அருளாசிகளைத் தந்து உலகினை வளர்ச்சியடையச் செய்து உலகினை காத்து அருள்புரிவார். ஆற்றல்மிக்க ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் நல்சீடர்களைக் கொண்டு இவ்வுலகம் தர்மஉலகமாக ஆகி வருகின்றபடியினால் இனி வருங்காலம் தமிழகத்திலிருந்து உலகப்பெருமாற்றம் துவங்கி அற்புதமாய் சிறப்பாய் நடந்து முருகப்பெருமானின் ஞானஆட்சியாக மக்களெல்லாம் ஏற்று மகிழும் நல்லாட்சியாக ஞானஆட்சியாக முருகப்பெருமானே ஆட்சி செய்கின்ற ஈடு இணையில்லாத ஆட்சியாக மாறிடும். சகல மாற்றங்களையும் தந்தருளும் ஆறுமுக அரங்கமகா தேசிகனே வாழ்க வாழ்க. உலக மக்களைக் கடைத்தேற்றும் ஞானஅரசே அரங்கா வாழ்க வாழ்க. மக்கள் கடைத்தேறுவதும் உலகம் அற்புதமாய் மாறுவதும் எல்லாம் தேசிகா இவ்வுலகினில் உம்மால் நடந்தேறுமப்பா எனக் கூறுகிறார் மகான் சங்கமுனிச்சித்தர்.

–சுபம்–